AL/2015/29/T-I

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2015 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2015 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2015

සන්නිවේදනය හා මාධ්‍ය අධ්‍යයනය I
தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் I
Communication and Media Studies I

29 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

**அறிவுறுத்தல்கள்:**

- ※ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ※ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- ※ விடைத்தாளின் பிற்பக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
- ※ 1 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என எண்ணிடப்பட்ட விடைகளில் **சரியான அல்லது மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத்** தரப்பட்டுள்ள **அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி (X)** இடுவதன் மூலம் காட்டுக.

**1.** செய்தியொன்றின் குறிமுறையவிழ்ப்பவராக இருப்பவர்
(1) செலுத்தி (transmitter) (2) வியாக்கியானம் தருபவர் (interpreter)
(3) வளப்படுத்தக்கூடிய ஒருவர் (4) பெறுநர்
(5) நிராகரித்தலை மேற்கொள்பவர்

**2.** பின்வருவனவற்றுள் டேவிட் கே. பேர்லோவினால் முன்வைக்கப்பட்ட அலைவரிசை / வழி (channel) பற்றிய பார்வைகள் தொடர்பில் பொருத்தமானதாக அமையப் **பெறாதது**
(1) செவிமடுத்தல் (2) நுகர்தல் (3) பார்த்தல்
(4) சுவையறிதல் (5) பிரதிநிதித்துவம் செய்தல்

**3.** ஹரோல்ட் டீ. லாஸ்வெல்லினால் முன்வைக்கப்பட்ட மாதிரி
(1) நேர்வழித் தொடர்பாடலின் இயல்புகளை விளக்குகிறது.
(2) பின்னூட்டம் தொடர்பில் கவனம் செலுத்துகிறது.
(3) வியாக்கியானம் தொடர்பிலான இயல்புகளை விளக்குகிறது.
(4) தொடர்பாடலில் இடையூறு பற்றி அறிமுகம் செய்கிறது.
(5) நேர்வழியல்லாத தொடர்பாடலின் இயல்புகளைக் குறித்துக் காட்டுகிறது.

**4.** ரவி காலையில் எழுந்த வேளை தலைவலிப்பதாக உணர்ந்தான். அதனால், தனது அலுவலகத்திற்குச் செல்வதில்லை என அவன் தீர்மானித்தான். இவ்வாறான ஒரு சூழல் உணர்த்துவது
(1) முறைசாராத் தொடர்பாடல் (2) தனியாள் (அகமுகி) தொடர்பாடல்
(3) ஆளிடைத் தொடர்பாடல் (4) வாய்மொழியல்லாத் தொடர்பாடல்
(5) முறைசார் தொடர்பாடல்

**5.** சமூகவியலாளர்களின் கருத்துப்படி சமூக, பொருளாதார, பண்பாட்டு அம்சங்கள் நாட்டாரியலின் மூலம் கற்றுக்கொள்ளப்பட முடியும். இது மிக அண்மித்ததாக இருப்பது
(1) வரலாற்றுக் கற்கையுடன் (2) மானிடவியல் கற்கையுடன்
(3) உளவியல் கற்கையுடன் (4) தொல்பொருளாய்வுக் கற்கையுடன்
(5) படைப்பாக்கக் கற்கையுடன்

**6.** தொடர்பாடலின் இயல்பை அறிமுகம் செய்வதில் மிகப் பொருத்தமான கருத்தாக அமைவது,
(1) தொடர்பாடல் மொழியின் அடிப்படையிலானது.
(2) தொடர்பாடல் ஓர் இருவழிச் செயன்முறையாகும்.
(3) தொடர்பாடல் ஒரு செயன்முறையாகும்.
(4) தொடர்பாடல் இடையூறைக் கொண்டிருக்கும்.
(5) தொடர்பாடல் பிரதிபலிப்புகளின் அடிப்படையில் அமைந்திருக்கும்.

[பக். 2 ஐப் பார்க்க

Department of Examinations, Sri Lanka
Department of Examinations, Sri Lanka

7. "பரஸ்பரப் புரிந்துணர்வை உருவாக்குவதற்காக அமைப்பொன்றினாலும் அதனது அங்கத்தவர்களாலும் - பொறுமை, திட்டமிடல், சிந்தித்தல் ஆகியவற்றுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்ட முயற்சியாக அறியப்படுவதே பொதுசனத் தொடர்பாகும்." இந்த வியாக்கியானம் முன்வைக்கப்பட்டது
   (1) பிரித்தானிய பொதுசனத் தொடர்பு நிறுவனத்தினால்
   (2) விஞ்ஞானி எட்வேர்ட் எல். பேர்னஸ் என்பவரால்
   (3) அமெரிக்க பொதுசனத் தொடர்பு நிறுவனத்தினால்
   (4) இந்திய பொதுசனத் தொடர்பு நிறுவனத்தினால்
   (5) விஞ்ஞானி ஐவி லீ என்பவரால்

8. "தகவலைப் பெறுவதற்குள்ள உரிமையானது ஒரு ஜனநாயகச் சமூகத்தில் நிலைபெற்றிருக்கக்கூடிய ஓர் அடிப்படைச் சிந்தனையாகும்." இந்தச் சிந்தனையின்படி, இவ்வாறான தகவலளிப்புச் சூழலை உருவாக்கும் புரிந்துணர்வை நோக்கி நகர்த்தும் தொடர்பாடல் எண்ணக்கருவாக பின்வருவனவற்றில் அமையப்பெறுவது எது?
   (1) அதிகார ஆதிக்க எண்ணக்கரு
   (2) தாராண்மைவாத எண்ணக்கரு
   (3) சமூகப் பொறுப்பு எண்ணக்கரு
   (4) சமூக ஜனநாயக எண்ணக்கரு
   (5) அபிவிருத்திசார் எண்ணக்கரு

9. தமிழ்த் தொலைக்காட்சி நாடகங்களை மாத்திரமே பார்த்துவந்த கமலுக்கு, கொரிய நாட்டு தொலைக்காட்சி நாடகமொன்றை முதற்தடவையாகப் பார்த்தபோது அதன் உள்ளடக்கத்தைப் புரிந்து கொள்வது கடினமாக இருந்தது. தொடர்பாடலின் பார்வையின் அடிப்படையில் இது
   (1) ஒரு பண்பாட்டு அதிர்வு
   (2) பின்னூட்டத்தின் குறைபாடு
   (3) இரசனையுடன் தொடர்புடைய ஒரு பிரச்சினை
   (4) ஆழ்பரிவு (empathy) தொடர்புடைய பிரச்சினை
   (5) அனுபவக் களம் (field of experience) தொடர்புடைய பிரச்சினை

10. புத்தாக்கப் பரவுகை (diffusion of innovation) என்பது
   (1) வில்பர் ஷ்ராமினால் முன்வைக்கப்பட்ட சிந்தனை
   (2) அரசியல் பார்வைகளின் பரவுதலுடன் தொடர்புடைய ஒரு சிந்தனை
   (3) புதிய கண்டுபிடிப்புகளையும் தொழினுட்பத்தையும் மக்களுக்கு அறிமுகம் செய்தல்
   (4) நவீன தொடர்பாடல் எண்ணக்கருவுடன் இணைந்த அடிப்படை அம்சம்
   (5) நவீன அபிவிருத்தியுடன் தொடர்புடைய ஒரு வரைவிலக்கணம்

11. கடந்த காலங்களில் பொதுசனத் தொடர்பு அதிகாரியின் கடமை பெரிதும் முன்கொண்டு செல்லப்பட்டது
   (1) பெண்களினால்
   (2) சமயத் துறவிகளால்
   (3) இளைஞர்களால்
   (4) அரச குடும்பத்து உறுப்பினர்களினால்
   (5) தொழில்சார் தகைமையாளர்களினால்

12. ஒரு குழுத் தலைவராக 'இணங்காது இருப்பதற்கான உரிமை பெறுமதி' கொள்வது
   (1) அவரால் முன்வைக்கப்படும் பார்வையின்பால் அடுத்தவர்களையும் சம்மதம் கொள்ளச் செய்வதில்
   (2) ஒருமித்த சிந்தனைகளுக்கு குழுவை நகர்த்திச் செல்வதில்
   (3) வேறுபட்ட சிந்தனைகளை அடக்கும் செயற்பாட்டால்
   (4) அனைவரினதும் சிந்தனைகளின் வழிச் செல்வதால்
   (5) வேறுபட்ட சிந்தனைகளை வெளிப்படுத்த அனுமதிப்பதன்வழியே ஆழமான பார்வைகள் கலந்துரையாடப்படுவதால்

13. மொழி உள்வாங்கப்படுதல் என்பது
   (1) வார்த்தைகளுக்கான புதிய அர்த்தங்களின் தோற்றமும் அவற்றை உறுதிப்படுத்தலும்
   (2) இலக்கண விதிமுறைகளை அடையாளங்காணலும் அவற்றின் பொருத்தமான பயன்பாடும்
   (3) மொழியின் பிரதான வடிவங்களையும் துணை அமைப்புகளையும் புரிந்து கொள்ளல்
   (4) மொழியின் உள்வாங்கலை உணர்வதும் அதனைப் பயன்படுத்தலும்
   (5) மொழியின் பொதுவான மற்றும் இயற்கையாய் அமைந்த அம்சங்களை அடையாளங் காணுதல்

14. ஒரு செய்தியைச் சரியாகப் புரிந்துகொள்ளும் ஆற்றலும் அதனை வியாக்கியானம் செய்து கொள்ளலும் ஒரு நபருக்கு கைவரப் பெறுவது
   (1) விமர்சன வழியில்
   (2) விளங்கறிவு (literacy) வழியில்
   (3) ஆய்வின் வழியில்
   (4) ஆழ்பரிவின் வழியில்
   (5) மதிப்பீட்டின் வழியில்

15. ஒரு படைப்பாக்கச் செய்தியில் காணக் கிடைக்கக்கூடிய அதி முக்கியமான அம்சம்
   (1) அநுமானிப்பு இயல்பு
   (2) ஒலி - காட்சி இயல்பு
   (3) பலவண்ண இயல்பு
   (4) சுயம் அல்லது உண்மைத்தன்மை
   (5) அளிக்கை செய்யும் இயல்பு

[பக். 3 ஐப் பார்க்க

Department of Examinations, Sri Lanka
Department of Examinations, Sri Lanka

16. ஒரு கலந்துரையாடலில் சில நண்பர்களால் பின்வரும் கூற்றுகள் வெளிப்படுத்தப்பட்டு இருந்தன.
- ரவி - நான் உனது பிரச்சினையை விளங்கிக்கொண்டேன்; சந்தேகமின்றி நான் வருவேன்.
- விமல் - நான் உனது பிரச்சினையை உணர்கிறேன்; நான் நிச்சயம் வருவேன்.
- கமல் - உனது பிரச்சினை எனக்குத் தெளிவானது; நான் நிச்சயம் வருவேன்.
- சுரேஷ் - என்னால் உனது பிரச்சினையைப் பார்க்கமுடிகிறது; சந்தேகமின்றி நான் வருவேன்.

'ஆழ்பரிவு' என்ற எண்ணக்கருவுடன் நெருங்கிய தொடர்புடைய கூற்றாக அமைவது,

(1) ரவியின் கூற்று (2) விமலின் கூற்று (3) கமலின் கூற்று
(4) சுரேஷின் கூற்று (5) விமல் மற்றும் கமலின் கூற்றுகள்

17. ஒரு கலந்துரையாடலில் சுவரொட்டி ஊடகம் தொடர்பில் வெளியிடப்பட்ட சில சிந்தனைகள் பின்வருமாறு
A - ஒரு செய்தி கவருந்தன்மையுடன் முன்வைக்கப்பட முடியும்.
B - முக்கிய தகவலைச் சுருக்கமாக வெளிப்படுத்த முடியும்.
C - பெரிய குழுவொன்றுக்கு ஒரே நேரத்தில் தகவல் தெரிவிக்கப்பட முடியும்.
D - தொடர்பியலாளர் எப்போதும் தெளிவாக அடையாளங் காணப்பட முடியும்.
E - காலநிலை நிபந்தனைகளால் செய்தி தடைப்படலாம்.

மேற்குறித்த சுவரொட்டி ஊடகம் பற்றிய சிந்தனைகளில் மிகப் பொருத்தமானது

(1) A, B, C (2) A, B, D (3) A, B, E (4) B, C, D (5) C, D, E

18. முன்னணி பிஸ்கட் கம்பனியொன்றின் ஊழியர்களின் வருடாந்த மகிழ்வூட்டும் சுற்றுலாவுக்குப் பயன்படுத்தப்பட்ட சகல பேருந்துகளும் குறித்த நிறுவனத்தின் அடையாளப் பெயர் (Brand Name) பொறித்த வர்ண ஒட்டுத் தாள்களினால் (ஸ்ரிக்கர்) அலங்கரிக்கப்பட்டிருந்தன. இவ்வாறான செயற்பாடொன்றின் அடிப்படை எதிர்பார்ப்பாக அமைவது
(1) நிறுவனத்தில் நல்லெண்ணத்தைப் பரப்புதல்
(2) உள்ளக பொதுசனத் தொடர்புடன் இணைந்த செயற்றிட்டமொன்றைக் கையாளல்
(3) ஊழியர்களின் நலநோன்பு தொடர்பிலான ஆர்வத்தைக் குறித்துக்காட்டுதல்
(4) படைப்பாக்க வழியில் பிரசித்தமொன்றைச் சம்பாதித்துக் கொள்ளல்
(5) ஊழியர்கள் தாம் பயணஞ் செய்த பேருந்துகளை அடையாளம் காணுதல்

19. வெகுசன ஊடகங்களை அபிவிருத்தியின்பால் பெருமெடுப்பில் பயன்படுத்தும் வாய்ப்புகளைக் குறித்துக்காட்டிய தொடர்பாடல் விஞ்ஞானி
(1) வில்பர் ஷ்ராம் (2) லூசியன் பை (3) எவரெட் எம். ரோஜர்ஸ்
(4) போலோ பியரே (5) கேர்ட் லெவின்

20. தற்கால மானுடப் பண்பாட்டுச் சூழலின் சிறப்பியல்பாக அமைவது
(1) தேசிய மயமாக்கம் (2) இன மையத்துவம் (3) பூகோளமயமாக்கம்
(4) பொதுவுடைமையாக்கம் (5) ஆன்மீகமயமாக்கம்

21. தொடர்பியலாளர் குறிமுறையாக்கச் (encoding) செயன்முறையில் அவசியம் தனது விசேட கவனத்தைச் செலுத்த வேண்டியதாக அமைவது
(1) கவர்ச்சிகரமான குறியீடுகளின் பயன்பாட்டில்
(2) படைப்பாக்கக் குறியீடுகளின் பயன்பாட்டில்
(3) தொடர்பாடல் மையக் குறியீடுகளின் பயன்பாட்டில்
(4) திட்டவட்டமான குறியீடுகளின் பயன்பாட்டில்
(5) பல்வேறு காட்சி வடிவங்களுடன் கூடிய குறியீடுகளின் பயன்பாட்டில்

22. தொடர்பாடல் என்னும் வார்த்தையை செய்திகளின் மீள்கட்டமைப்புச் செயன்முறை என வியாக்கியானஞ் செய்தவர்
(1) போல் லாஸர்பெல்ட் (2) வில்பர் ஷ்ராம் (3) ஷெனொன் மற்றும் வீவர்
(4) டேவிட் கே. பெர்லோ (5) ஹரோல்ட் டீ. லாஸ்வெல்

23. ஆன்மீகத் தொடர்பாடலுக்கு **உரியதல்லாதது**
(1) சமயத் தொடர்பாடல் (2) கலைத்துவத் தொடர்பாடல் (3) அரசியல் தொடர்பாடல்
(4) இலக்கியத் தொடர்பாடல் (5) தொன்மம்சார் தொடர்பாடல்

[பக். 4 ஐப் பார்க்க

Department of Examinations, Sri Lanka
Department of Examinations, Sri Lanka

**24.** பின்வரும் கூற்றுகளுடன் இணைந்த மொழியின் பயன்களைக் குறித்து நிற்கும் வரிசைக் கிரமத்தைத் தெரிவுசெய்க.
A - ஒரே விடயத்தை வேறுபட்ட வழிகளில் முன்வைத்தல்
B - மொழியின் உச்சரிப்புடன் இணைந்த நடத்தைக் கோலங்களைக் காணுதல்
C - ரிதம், வேகம், மொழி மரபுகள் (idioms) ஆகிய சிறப்பியல்புகளில் தங்கியிருத்தல்
(1) A - விவரணம், B - பேச்சு, C - உரை
(2) A - உரை, B - விவரணம், C - ஆற்றுகை
(3) A - ஆற்றுகை, B - பேச்சு, C - விவரணம்
(4) A - விவரணம், B - ஆற்றுகை, C - பேச்சு
(5) A - பேச்சு, B - விவரணம், C - உரை

**25.** சமூக சந்தைப்படுத்தல் விளம்பரங்கள் (social marketing advertisements) ஆவன
(1) சமூக வலைப்பின்னல் தொடர்பாடலின் ஒரு விளைவு
(2) குறித்த குழுக்களுடனான சேவைச் சந்தைப்படுத்தலுக்குச் சொந்தமானது
(3) ஒரு சமூக ஜனநாயக தொடர்பாடல் செயற்பாடு
(4) பிரசித்தமான பண்பாட்டின் (popular culture) ஒரு விளைவு
(5) அபிவிருத்திசார் தொடர்பாடலின் ஒரு பயன்பாடு

**26.** மனிதன் தகவலுடனும் தொடர்பாடல் ஊடகங்களுடனும் செலவழிக்கும் நேரம் சீராக அதிகரித்து வருவதாக ஆய்வறிக்கைகளைக் கொண்டு தெளிவாகின்றது. இவ்வாறான ஒரு பின்னணி உருவாகி வருவதற்குக் காரணம்
(1) உலகம் பூராவிலும் தொலைக்காட்சி ஊடகத்தின் விரிவாக்கம்
(2) செய்தி முகவரகங்களின் தொழிற்பாடு
(3) அபரிமிதமான இணையத் தொடர்புகள்
(4) செல்லிடத் தொலைபேசிகளின் துரிதமான வளர்ச்சி
(5) நவீன தொடர்பாடல் தொழினுட்பக் கருவிகளை இலகுவாகக் கையாளல்

**27.** பூகோள பண்பாட்டின் விருத்தி நிகழத் தொடங்கியது
(1) 20 ஆம் நூற்றாண்டின் இறுதியில்
(2) உரோமானிய காலத்தின் இறுதியில்
(3) நவீன காலத்தின் தொடக்கத்தில்
(4) மத்திய காலத்தின் இறுதியில்
(5) புராதன காலத்தின் இறுதியில்

**28.** ஒரு செய்திப் பத்திரிகையின் காட்சி ரீதியான கவரும் தன்மையை அதிகரிக்கப் பயன்படுத்தக்கூடிய வழிமுறையாகக் கொள்ளப்பட **முடியாதது**
(1) கோடுகளையும் வடிவங்களையும் பயன்படுத்துதல்
(2) ஓவியங்களையும் கேலிச் சித்திரங்களையும் பயன்படுத்துதல்
(3) புகைப்படங்களினதும் வர்ணங்களினதும் பயன்பாடு
(4) சுருக்கமான வாக்கியங்களினதும் உயிரோட்டமுள்ள மொழியினதும் பயன்பாடு
(5) வேறுபட்ட எழுத்து வகைகளையும் அளவுகளையும் பயன்படுத்துதல்

**29.** சமூக ஒற்றுமைக்கு மிகவும் பயன்படும் பண்பாட்டுப் போக்காக (Cultural trend) அமைவது
(1) பண்பாட்டுப் பரவுகை (cultural diffusion)
(2) பண்பாட்டுச் சுற்றோட்டம் (cultural circulation)
(3) பண்பாட்டு மாறா எண்ணக்கரு (cultural stereotype)
(4) பண்பாட்டு அதிர்வு (cultural shock)
(5) பண்பாட்டுப் பரிமாற்றம் (cultural exchange)

**30.** பின்வருவனவற்றுள் ஆட்களிடைத் தொடர்பாடலின் கீழ் உள்ளடக்கப்பட **முடியாதது**
(1) தொடர்பாடல் செய்யப்பட்ட அம்சங்களில் மாற்றங்களை செய்யமுடியாத தன்மை
(2) குறியீடுகளையும் சின்னங்களையும் பயன்படுத்தும் ஆற்றல்
(3) அர்த்தங்களைக் கட்டமைக்கும் ஆற்றல்
(4) உறவுகளை உருவாக்கவும் தக்கவைக்கவுமான ஆற்றல்
(5) தொடர்பாடலை நாம் புறந்தள்ள முடியாத தன்மை

[பக். 5 ஐப் பார்க்க

Department of Examinations, Sri Lanka
Department of Examinations, Sri Lanka

**31.** பின்வரும் நான்கு செவிமடுப்பு நிகழ்வுகளின் பொருத்தமான நிலைகளைத் தெரிவுசெய்க.

A - இசையை அல்லது மகிழ்வூட்டக்கூடிய பேச்சைச் செவிமடுத்தல்
B - சிக்கலில் ஆட்பட்டுள்ள நண்பனைச் செவிமடுத்தல்
C - விசேட உரையொன்றைச் செவிமடுத்தல்
D - தேர்தல் உரையொன்றைச் செவிமடுத்தல்

(1) இரசனை, ஆய்வு, விமர்சன நோக்கு, ஆழ்பரிவு
(2) இரசனை, விமர்சன நோக்கு, ஆய்வு, ஆழ்பரிவு
(3) இரசனை, ஆழ்பரிவு, ஆய்வு, விமர்சன நோக்கு
(4) இரசனை, ஆய்வு, ஆழ்பரிவு, விமர்சன நோக்கு
(5) இரசனை, விமர்சன நோக்கு, ஆழ்பரிவு, ஆய்வு

**32.** மாற்று ஊடகம் பற்றிய கலந்துரையாடல் ஒன்று வகுப்பறையில் நடைபெற்றது.

காமினி - அவை மாற்று ஊடகங்களாக இருந்தாலும் ஆதாயங்கள் பெறப்பட முடியும்.
ரமணி - அப்படியிருந்தாலும், ஆதாயங்களைச் சம்பாதிப்பதென்பது முக்கியமான நோக்கமாக இருப்பதில்லை.
கஜனி - பெருமளவு ஊழியர்கள் இல்லாமலிருப்பதால் செலவீனம் குறைவானது.
ஜெயனி - மேலும், நேயர்களின் எண்ணிக்கையும் வரையறைக்குட்பட்டது.

மேற்கூறப்பட்டவற்றிலிருந்து மாற்று ஊடகம் தொடர்பில் ஏற்கக்கூடிய கூற்றை முன்வைத்தவர்கள்

(1) காமினி, ரமணி மற்றும் கஜனி
(2) காமினி, கஜனி மற்றும் ஜெயனி
(3) ரமணி, கஜனி மற்றும் ஜெயனி
(4) காமினி, ரமணி மற்றும் ஜெயனி
(5) காமினி, ரமணி, கஜனி, ஜெயனி ஆகிய சகலரும்

**33.** டெங்கு நோய் பற்றிய கியூப நாட்டு விவரணப்படம் ஒன்று இலங்கையில் நோய் பரவிய மாகாணங்களில் திரையிடப்பட்டது. ஓர் அபிவிருத்திச் செய்தியாக இதன் முக்கியத்துவம் அமையும் காரணம்

(1) ஒத்த அனுபவத்துடன் தொடர்புடைய தகவலை முன்வைப்பது
(2) வெளிநாடு ஒன்றின் அனுபவமாக இருப்பது
(3) ஒத்த பண்பாட்டு இயல்பைக் கொண்டிருப்பது
(4) நாட்டின் அனைத்து மக்களையும் இந்தச் செய்தி சென்றுசேர்வது
(5) குணமாக்கும் வழிமுறைகள் மற்றும் மருந்துகள் தொடர்பிலான அறிவை வழங்குவது

**34.** பொதுசனக் கருத்துருவாக்கம் வெகுசன ஊடகங்களினால் கட்டமைக்கப்படுவது

A - தகவல் வழிமுறையில் மத்தியஸ்தம் செய்வதால்
B - தகவல் வழிமுறையைத் தெரிவுசெய்து கொள்வதால்
C - நடத்தைகளின் மூலமாக

மேற்குறித்த கூற்றுகளில் சரியானது/சரியானவை

(1) A மாத்திரம்
(2) B மாத்திரம்
(3) C மாத்திரம்
(4) B, C மாத்திரம்
(5) A, B, C ஆகிய எல்லாம்

**35.** பார்வையாளர்களை அடையாளப்படுத்துதல் தொடர்பில் வகுப்பறையில் ஏற்பட்ட பின்வரும் அவதானிப்புகள் சுட்டிக்காட்டப்பட்டன.

A - பார்வையாளர்களின் தொகுப்பு முறைமை தொடர்ந்து மாற்றத்திற்கு உட்பட்டுள்ளது.
B - அடையாளம் தொடர்பில் புரிந்துணர்வு இல்லை.
C - பார்வையாளர்களிடையே ஆளிடை உறவு வரையறைக்குட்பட்டது.

மேற்குறித்த கூற்றுகளின் அடிப்படையில் மேற்படி பார்வையாளர்கள் அடையாளப்படுத்தப்படுவது

(1) குழுப் பார்வையாளர்களாக
(2) ஆட்களிடைப் பார்வையாளர்களாக
(3) வெகுசனப் பார்வையாளர்களாக
(4) மாகாணப் பார்வையாளர்களாக
(5) இலக்கு வைக்கப்படும் பார்வையாளர்களாக

- பின்வரும் வேறுபட்ட தொடர்பாடல் அம்சங்களைக் கவனத்திற் கொள்வதன் மூலம் **36** தொடக்கம் **40** வரையான வினாக்களுக்கு விடையளிக்குக.

| | | |
|---|---|---|
| A - குறிமுறையாக்குபவர்/தொடர்பியலாளர் | B - செய்தி | C - விளைவு |
| D - குறியீடுகள் | E - குறிமுறையவிழ்ப்பவர்/பெறுநர் | F - இடையூறு |
| G - வியாக்கியானம் செய்தல் (interpretation) | H - வழி/அலைவரிசை (channel) | I - அனுப்புநர்/கடத்துநர் |
| J - சேருமிடம் | K - மூலம் | L - பின்னூட்டம் |
| M - அனுபவக்களம் (field of experience) | N - சூழமைவு (context) | |

**36.** மேற்குறித்த அம்சங்களில் ஹரோல்ட் டீ. லாஸ்வெல்லின் வியாக்கியானத்தில் உள்ளடக்க **முடியாத** மூன்று அம்சங்கள்

(1) A, C, I
(2) C, G, K
(3) D, G, H
(4) D, K, L
(5) M, B, N

[பக். 6 ஐப் பார்க்க

Department of Examinations, Sri Lanka
Department of Examinations, Sri Lanka

**37.** ஷெனொன் மற்றும் வீவரின் மாதிரியில் இடம்பெறும் அம்சங்களை வரிசைக்கிரமமாகத் தெரிவுசெய்து உள்ளடக்கியிருப்பது
(1) A, B, D, H, N (2) A, I, D, E, J (3) K, I, D, E, J
(4) K, I, D, M, J (5) K, I, G, L, J

**38.** மேற்குறித்த அம்சங்களில் D ஆனது A இற்கும் E இற்கும் புரிதலை உருவாக்கும் **திறனற்றதாக** இருந்தால், அது அறியப்படுவது
(1) C என (2) F என (3) G என (4) L என (5) M என

**39.** மேற்குறித்த அம்சங்களில் இருந்து ஷ்ராம் - ஒஸ்கூட் மாதிரியைப் புரிந்துகொள்வதற்கு உதவும் பொருத்தமானவற்றைத் தருவது
(1) A, B, E, G (2) A, B, E, J (3) A, E, C, M
(4) B, D, N, G (5) B, E, H, G

**40.** மேற்குறித்த அம்சங்களில் தொடர்பியலாளர், பெறுநர் ஆகிய இருவருக்கும் தொடர்பாடல் செயன்முறையைத் தொடர்ச்சியாகப் பேண முக்கியமானதாக இருப்பது
(1) C இன் ஆற்றல் (2) G இன் ஆற்றல் (3) J இன் ஆற்றல் (4) K இன் ஆற்றல் (5) N இன் ஆற்றல்

**41.** செய்திப் பத்திரிகையொன்றின் ஆசிரியருக்குக் கிடைக்கப்பெற்ற கட்டுரை ஒன்றில் எழுத்துப் பிழைகளும் இலக்கணப் பிழைகளும் உள்ளடங்கியிருந்தன. உள்ளடக்கப்பட்டிருந்தவற்றில் சரியான வாக்கியம் எது ?
(1) அமைதியும் அர்ப்பனிப்பும் மாணவருக்குப் புகட்டப்பட வேண்டும்.
(2) வேலைப்பளுவினால் நிர்வாகத் திறமை வீனடிக்கப்படுகிறது.
(3) நேர்மையும் விசுவாசமும் இன்று காணக்கிடையாதது ஆகிவிட்டன.
(4) அப்பாவும் அம்மாவும் மிகச் சரியானதையே எமக்குச் செய்தனர்.
(5) இந்த நிர்வாகமும் உறுப்பினர்களும் எமக்கு எதனைச் செய்தன?

**42.** மரப்பொருட்கள் உற்பத்திப் பணியில் ஈடுபடும் முன்னணி வர்த்தகக் கம்பனியொன்று, பொதுசனத் தொடர்புத் திட்டமாக உலக சுற்றுச்சூழல் தினத்தையொட்டி மரம் நாட்டுதலின் முக்கியத்துவத்தை தொடர் படைப்பாக்க விளம்பரங்கள் மூலம் பிரசுரித்து வந்தது. இதனால் கருத்திற் கொள்ளப்படக் கூடியது
(1) உயர் தரமான தமது மரப்பொருள் உற்பத்திப் பணியை உறுதிசெய்துகொள்ளும் ஒரு முயற்சி
(2) சுற்றுச்சூழல் தினத்தைக் கொண்டாடுவதை ஆதரிக்கும் ஒரு செயற்பாடு
(3) கம்பனியின் நல்லெண்ணத்தை உயர்த்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட ஒரு நடவடிக்கை
(4) தமது படைப்புகளுக்கான மூலப்பொருட்களுக்கான தேவையை நிவர்த்திக்கும் ஒரு நீண்டகால வழிமுறைக்கான செயற்பாடு
(5) மர நடுகையின் முக்கியத்துவம் பற்றிய பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்குதல்

**43.** அபிவிருத்தித் தொடர்பியலாளர் ஒருவருக்கான தகுதிகளைப் பேசுபொருளாகக் கொண்ட பாடசாலை ஊடகச் சமூகத்தின் கலந்துரையாடல் ஒன்று வருமாறு
சுரேஷ் - செய்தியை வழங்கவல்ல மிகப் பொருத்தமான ஊடகத்தைத் தெரிவுசெய்தல் முக்கியமானது.
மது - பிரச்சினைகளை அடையாளம் காண்பதற்கு உயர் முன்னுரிமை வழங்கப்பட்டாக வேண்டும்.
கமல் - தற்போதைய நிலைப்பாட்டுடன் பொருந்தக்கூடியதாக அமைவது முக்கியமாகும்.
மேற்குறித்தவற்றில் சரியான கூற்று வெளிப்படுத்தப்பட்டது
(1) சுரேஷினால் மாத்திரம் (2) சுரேஷ் மற்றும் மதுவினால் மாத்திரம்
(3) சுரேஷ் மற்றும் கமலினால் மாத்திரம் (4) மது மற்றும் கமலினால் மாத்திரம்
(5) சுரேஷ், மது, கமல் ஆகிய மூவரினாலும்

**44.** வெகுசன ஊடகச் செயற்பாட்டுடன் சம்பந்தப்பட்ட பின்வரும் கூற்றுகளில் **பொருத்தமற்றதைத்** தெரிவுசெய்க.
(1) பெறுநர்களின் செயற்படு பங்கேற்பைக் காணமுடியும்.
(2) தகவல் செலுத்துகை எப்போதும் மேலிருந்து கீழாக இருக்கும்.
(3) செய்திகளில் தேர்தல் அரசியல் சம்பந்தமான தகவல்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
(4) வெகுசன ஊடகங்களின் உபரிப் பெறுதியாக பூகோளத் தகவல் கிராமத்தின் உருவாக்கம் அமையும்.
(5) வேறுபட்ட ஊடக நிறுவனங்களுக்கு ஒருவரே உரிமையாளராக இருப்பது ஊடகத் தன்னாதிக்கத்தை உருவாக்கும்.

**45.** வேறுபட்ட பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு ஆழிப்பேரலை அனர்த்தம் சம்பந்தமான தகவலை அளிக்கக்கூடிய மிகப் பொருத்தமான ஊடக வழியைத் தெரிவுசெய்க.
A - கடலோரப் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் உதைபந்து விளையாடும் மாணவர்கள்
B - நிலப்பகுதிக்கு அண்மித்ததான கடலில் காணப்படும் மீனவர்கள்
C - நாட்டின் வேறுபட்ட பகுதிகளில் வாழும் பொதுசனத்தினர்
D - குறித்த ஆழிப்பேரலைச் சூழலை முன்னைய சம்பவங்களுடன் ஒப்பீட்டாய்வு செய்யும் ஊடகப் பணியாளர்கள்
மேற்குறித்த குழுவினர்களுக்கான பொருத்தமான வழிகளைத் தரும் வரிசைக்கிரமமான தொடர்
(1) வானொலி மற்றும் தொலைக்காட்சி, இணையம், சைரன், செல்லிடத் தொலைபேசி
(2) செல்லிடத் தொலைபேசி, சைரன், வானொலி மற்றும் தொலைக்காட்சி, இணையம்
(3) சைரன், செல்லிடத் தொலைபேசி, வானொலி மற்றும் தொலைக்காட்சி, இணையம்
(4) சைரன், வானொலி மற்றும் தொலைக்காட்சி, செல்லிடத் தொலைபேசி, இணையம்
(5) வானொலி மற்றும் தொலைக்காட்சி, செல்லிடத் தொலைபேசி, இணையம், சைரன்

[பக். 7 ஐப் பார்க்க

Department of Examinations, Sri Lanka
Department of Examinations, Sri Lanka

**5.** (i) பிரசித்தமான பண்பாட்டின் (Popular Culture) **நான்கு** அடிப்படைப் பண்புகளைப் பெயரிடுக.

(ii) வன்முறை செய்திப்பத்திரிகை ஊடகத்தில் எவ்வாறு விவரிக்கப்படுகின்றது என்பதை **இரண்டு** வழிகளில் சுருக்கமாக விளக்குக.

(iii) புதிய ஊடகங்களின் (new media) மொழிப் பயன்பாடு தொடர்பில் **மூன்று** சிறப்பியல்புகளைச் சுருக்கமாக விபரிக்குக.

(iv) பண்பாட்டுப் பரிமாற்றத்தின் முக்கியத்துவத்தை **நான்கு** அம்சங்களின் அடிப்படையில் விளக்குக.

**6.** நீங்கள் காலையில் பார்த்த கார் விபத்துத் தொடர்புடைய செய்தியொன்று அன்றைய தினம் இரவு தொலைக்காட்சிச் செய்தியில் ஒளிபரப்பானது. ஆனால், நீங்கள் பார்த்த விபத்துக்கும் ஒளிபரப்பான செய்திக்கும் இடையே வேறுபாடுகள் காணப்பட்டன.

(i) வெகுசன ஊடக அறிக்கையிடலில் இவ்வாறான மாற்றங்களை இனங்காணும் பிரதான எண்ணக்கரு யாது?

(ii) வாகன விபத்துக்களைக் குறைப்பது தொடர்பிலான அறிவுறுத்தல் செய்திகள் அடங்கிய பாரிய வீதி அறிவிப்புப்பலகைகளை (Billboards) நாடளாவிய ரீதியில் அமைப்பதெனப் பிரேரிக்கப்பட்டது. இவ்வாறான பாரிய வீதி அறிவிப்புப்பலகைகளின் முக்கியத்துவத்தை **இரண்டு** அம்சங்களின் அடிப்படையில் விளக்குக.

(iii) செய்திப்பத்திரிகையொன்றிலும் வாகன விபத்து பற்றி அறிக்கையிடப்பட்டிருந்தது. செய்திப்பத்திரிகை ஏனைய வெகுசன ஊடகங்களுடன் வேறுபடும் வழிகள் **நான்கைக்** குறிப்பிட்டு, அவற்றில் **இரண்டை** விளக்குக.

(iv) நீங்கள் ஏற்கனவே பார்த்திருந்த விபத்தை இன்னொரு நபருக்கு விபரிக்கப் பயன்பட்ட தொடர்பாடல் வகையினை அதன் **நான்கு** சிறப்பியல்புகளின் அடிப்படையில் விளக்குக.

**7.** தொடர்பாடல் ஒரு கூட்டிணைப்புச் செயன்முறையாகும்.

(i) தொடர்பாடலின் அடிப்படை அம்சங்கள் **நான்கைப்** பெயரிடுக.

(ii) தனியாள் ஒருவர் உடல்மொழியைப் பாவித்து அளிக்கக்கூடிய **நான்கு** வாய்மொழியல்லாத தொடர்பாடல் வழிமுறைகளைப் பெயரிட்டு, அவற்றுள் **ஒன்று** பற்றி சுருக்கமாக விபரிக்குக.

(iii) பிரசை (குடிசார்) ஊடகவியலாளர் எவ்வாறு வெகுசன ஊடகவியலாளரிடமிருந்து **மூன்று** வழிகளில் வேறுபடுகிறார் என்பதை விபரிக்குக.

(iv) இரண்டு படிநிலை எண்ணக்கருவை வரிப்படத்துடன் குறிப்பிட்டு, அதன் அடிப்படைப் படிநிலைகள் **இரண்டை** விபரிக்குக.

* * *

Department of Examinations, Sri Lanka
Department of Examinations, Sri Lanka

AL/2015/29/T-II

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2015 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2015 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2015

සන්නිවේදනය හා මාධ්‍ය අධ්‍යයනය II
தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் II
Communication & Media Studies II

29 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

**அறிவுறுத்தல்கள்:**

※ **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக. ஒவ்வொரு வினாவின் விடைக்கும் **20** புள்ளிகள் வழங்கப்படும்.

**1.** (i) அகமுகி (தன்க) தொடர்பாடலின் **நான்கு** இயல்புகளைப் பெயரிடுக.

(ii) ஊடகப் பண்பாட்டின் **நான்கு** இயல்புகளைப் பெயரிட்டு, அவற்றுள் **ஒன்றைச்** சுருக்கமாக விபரிக்குக.

(iii) திரைப்படத்திற்கும் தொலைக்காட்சி ஊடகத்திற்குமான இயல்புகள் **மூன்றை** ஒப்பீட்டடிப்படையில் விபரிக்குக.

(iv) தற்போதைய ஊடகச் செயன்முறையில் தணிக்கையின் செயற்பாடு தொடர்பில் **நான்கு** வழிமுறைகளை உதாரணங்களுடன் விளக்குக.

**2.** பாடசாலை ஊடகக் கழகத்தின் வினைத்திறன்மிக்க செயற்பாட்டுக்கு உள்ளக மற்றும் வெளியகக் குழுக்களை அமைத்தல் அவசியமானது.

(i) பாடசாலை ஊடகக் கழகத்தின் வெளியகக் குழுவிற்கு நியமிக்கப்படக்கூடிய **நான்கு** நபர்களைப் பெயரிடுக.

(ii) உங்கள் பாடசாலைக்குப் பயன்படும் ஓர் அபிவிருத்திச் செயற்றிட்டத்தைப் பெயரிட்டு, அவ்வாறான அபிவிருத்திச் செயற்றிட்டத்தை மதிப்பீடு செய்வதற்கான **மூன்று** அம்சங்களைக் குறிப்பிட்டு, அவற்றுள் **ஒன்றைச்** சுருக்கமாக விளக்குக.

(iii) உளச் சிக்கல்கள் தொடர்பாக செய்திப் பத்திரிகையொன்றில் வெளியான விவரணக் கட்டுரையொன்று பற்றி பாடசாலை வகுப்பறையில் கலந்துரையாடப்பட்டது. உளநிலை பாதிக்கப்படுவதால் உருவாகக்கூடிய தனியாள் ஒருவரின் தவறான நடத்தை வெளிப்பாடுகள் **நான்கைப்** பெயரிட்டு, அவற்றுள் **இரண்டை** உதாரணங்களுடன் விளக்குக.

(iv) வெகுசன ஊடக நேர்காணல்களின் முக்கியத்துவத்தை **இரண்டு** அம்சங்களின் அடிப்படையில் குறிப்பிட்டு, அவை ஒவ்வொன்றுக்கும் **இரண்டு** உதாரணங்களைத் தந்து விபரிக்குக.

**3.** செய்திப் பத்திரிகையொன்றின் பிரதம ஆசிரியர் பதவிக்கு நீங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகக் கற்பனை செய்து கொள்க.

(i) செய்திப்பத்திரிகையொன்றின் தலையங்கங்களை எழுதும்போது கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய **நான்கு** அம்சங்களைப் பெயரிடுக.

(ii) ஊடக விளங்கறிவின் (media literacy) அவசியம் தொடர்பில் **நான்கு** அம்சங்களைக் குறிப்பிட்டு, அவற்றுள் **ஒன்றைச்** சுருக்கமாக விபரிக்குக.

(iii) மாற்று ஊடகங்களின் **நான்கு** பண்புகளைப் பெயரிட்டு, அவற்றுள் **இரண்டை** விளக்குக.

(iv) ஊடக விமர்சனத்தின் அவசியம் தொடர்பிலான **நான்கு** அம்சங்களின் அடிப்படையில் ஆசிரியர் தலையங்கம் (editorial) ஒன்றை எழுதுக.

**4.** உணவு உற்பத்தி நிறுவனமொன்றின் வெகுசனத் தொடர்பு அலுவலராக உங்களைக் கற்பனை செய்க. அந்த நிறுவனத்தின் உணவு உற்பத்தி தொடர்பிலான பிரச்சினையொன்றைத் தெளிவுபடுத்துமுகமாக ஊடக மாநாடு ஒன்றை நடாத்துமாறு நீங்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளீர்கள்.

(i) ஊடக மாநாட்டை ஒழுங்கமைப்பது தொடர்பில் கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய **நான்கு** அம்சங்களைப் பெயரிடுக.

(ii) பொதுசன உறவை உருவாக்குவதில் புதிய ஊடகத்தினைப் பயன்படுத்தும் **இரண்டு** வழிமுறைகளைச் சுருக்கமாக விளக்குக.

(iii) தொலைக்காட்சி ஊடகத்தில் ஒளிபரப்பாகும் உணவு விளம்பரங்கள் எவ்வாறு நுகர்வோரைச் செல்வாக்குக்குட்படுத்துகிறது என்பதை **மூன்று** அம்சங்களின் அடிப்படையில் விளக்குக.

(iv) நாட்டாரியலின் **நான்கு** அம்சங்களைப் பெயரிட்டு, அவற்றில் **மூன்று** எவ்வாறு நிறுவனத்தின் விளம்பரச் செயன்முறைக்குப் பயன்படுத்தப்படலாம் என்பதை விளக்குக.

[பக். 2 ஐப் பார்க்க

Department of Examinations, Sri Lanka

**46.** பொதுசன உறவு பற்றிய **பொருத்தமற்ற** கூற்றைத் தெரிவுசெய்க.
(1) பொதுசனத்தினர் முக்கியமான பங்காளர்கள்.
(2) எப்போதும் பணத்தை வழங்குவதன் மூலம் பொதுசன உறவு நிறைவேற்றப்பட முடியும்.
(3) உறவுகளைக் கட்டியமைத்தல் முன்னுரிமையான செயற்பாடாகும்.
(4) பல்வேறு பகுதியினருக்கும் அது ஆதாயங்களை வழங்கும்.
(5) நன்மையே பயக்கும் விழிப்புணர்வு அடிப்படை இலக்காக அமைந்திருக்கும்.

**47.** பிரதம மந்திரியானவர் தேர்தல் காலத்துக்கு அண்மித்ததாக பாடசாலை செல்லும் தனது சிறிய குழந்தையுடன் வருகை தந்திருந்தது பிரதான செய்தியாகப் பல வெகுசன ஊடக நிறுவனங்களாலும் அறிக்கையிடப்பட்டிருந்தது. இது ஆய்வுக்குட்படுத்தப்பட முடிவது
(1) பெற்றோருக்கும் குழந்தைகளுக்குமான உறவுடன் தொடர்புடைய ஒரு நிகழ்வாக
(2) தனிப்பட்ட பிம்பத்தை உயர்த்தும் ஒரு முயற்சியாக
(3) மிகப் பிரபலமானவர்களின் தனிப்பட்ட செயற்பாடுகள் குறித்த வெகுசன ஊடகங்களின் கவர்மையமாவதை
(4) ஊர்ப் பேச்சுக்கு/அரட்டைக்கு வெகுசன ஊடகங்களில் இருக்கக்கூடிய உயர் தேவைக்கான உறுதிப்படுத்தலாக
(5) வகிக்கும் பொறுப்புகளை புறந்தள்ளி அனைத்து மக்களும் சமம் என்பதைச் சுட்டிக்காட்டும் ஒரு முயற்சியாக

**48.** சமூகத்தின் வளர்ச்சிக்குக் காரணமாகும் வகையில் முரண்பாடுகளைப் பயன்படுத்தக்கூடியதாக அமையும் வழிமுறை
(1) தீர்வு
(2) ஒடுக்குதல்
(3) முகாமைத்துவம்
(4) மத்தியஸ்தம்
(5) நிலைமாற்றுதல்

**49.** பெறுநர் பற்றிய மிகச் சரியான கூற்று
(1) இரு நபர்கள் இல்லாத பட்சத்தில் பெறுநர் காணப்படமாட்டார்.
(2) பெறுநரின் வகிபங்கு மாற்றப்படாது.
(3) வியாக்கியானம் செய்யக்கூடிய திறன்களைப் பெறுநர் எப்போதும் கொண்டிருப்பார்.
(4) பெறுநரின் விளங்கறிவு சமனாக இருக்கமாட்டாது.
(5) பெறுநரின் இரசனைப் பகுதி பரந்திருக்கக் காணப்படும்.

**50.** இலத்திரனியல் ஊடக நிறுவனங்களின் உருவாக்கத்தில் வலுவான போட்டித்தன்மை அதிகரிப்பதற்குக் காரணம்
(1) அரசியல் குடும்ப அதிகாரத்தின் உறவுநிலை
(2) வரையறுத்த அளவில் காணப்படும் அலைவரிசை ஒதுக்கீட்டு அமைப்பு
(3) வர்த்தக வாணிப முயற்சிகளின் நேரடிப் பங்கேற்பு காணப்படுதல்
(4) பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்குவதற்கான பரந்த மத்தியஸ்தப் பணி
(5) வெகுசனத் தொடர்பாடல் செயன்முறையின் அனுசரணையாளராகச் செயற்படுதல்

* * *

Department of Examinations, Sri Lanka
Department of Examinations, Sri Lanka